RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2143

OPEN ACCESS

# சங்க இலக்கியங்களில் வேள்பாரியின் கொடைத்திறம்

கோ. சரவணன் [அ, *], இரா. செல்வராஜு [அ]

[அ] தமிழாய்வுத் துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, ப. வேலூர், நாமக்கல்-638182, தமிழ்நாடு, இந்தியா.

# Generosity and Kindness of Vaelpaari in Sangam Literature

G. Saravanan [a, *], R. Selvaraju [a]

[a] Department of Tamil, Kandaswami Kandar's College, P. Velur, Namakkal-638182, Tamil Nadu, India

* Corresponding Author: saravanangopal983@gmail.com

Received: 30-08-2022
Revised: 27-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

It is said that one who born in a clan which has a practice of giving gifts to others and helping others; will offer their hands to the sufferers even before the sufferers tells them they are in need. This article is about the merits of Vaelpaari, the king of Parampu Mountain. He had a humble nature and a kind heart. Sangam literary books such as Puranaanuru, pathitrupathu, Sirupaanatrupadai, Thirukkural, Nikandul, Devaram, Tirupukazh have been analyzed in this article to know about Vaelpaari's generosity and kindness.

**Keywords:** Vaelpaari, Puranaanuru, pathitrupathu, Sirupaanatrupadai, Thirukkural

## முன்னுரை

"இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே உள" (Sirpi Balasubramaniyam, 2021)

என்னிடம் பொருள் இல்லை என்று தன் துன்பத்தை ஒருவன் உரைக்கும் முன்பே உணர்ந்து கொடுத்தல் கொடையை நடையாகக் கொண்ட குலத்தில் பிறந்தவனிடமே காணப்படும். இத்தகைய ஈகைத் தன்மையும், கருணை உள்ளமும் கொண்ட வேளிர்குலத் தலைவன் பறம்பு மலையாண்ட குறுநிலை மன்னன் வேள்பாரியின் கொடைத்திறம் குறித்து ஆராயும் பொருட்டு புறநானூறு, பதிற்றுப்பத்து, சிறுபாணாற்றுப்படை, திருக்குறள், நிகண்டுகள், தேவாரம், திருப்புகழ் போன்ற சங்க இலக்கியங்கள், நீதி நூல்கள் ஆகியவை முழுமையாக வாசிக்கப்பட்டு வேள்பாரியின் கொடைத்திறம் குறித்தும், கருணை உள்ளம் குறித்தும் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

## வேள்பாரி

வேளிர்குலத்தின் தோன்றலுக்குக் காரணமான மாவீரன் எவ்வியின் வழித் தோன்றலும் 'பறம்பு நாடு' என்னும் நிலப்பகுதியை ஆட்சி செய்த குறுநில மன்னனுமான வேள்பாரி பாண்டியப் பேரரசின் எல்லைக்குட்பட்ட பறம்பு மலையை ஆட்சி செய்த வேளிர் குலத்தலைவன் ஆவான். வேளிர்குலத்தின் தலைவன் என்பதால் அவன் 'வேள்பாரியென்றே' எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டான் என்பதால் அவன் 'வேள்பாரியென்றே' எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டான்.

## கடையேழு வள்ளல்களில் முதன்மையானவன்

சங்க இலக்கியங்களில் வள்ளல்களின் பெயர்களை நினைவுகூறும் போதெல்லாம் வேள்பாரியின் பெயரே முதன்முதலில் வைத்துக் கூறப்பட்டுள்ளது.

## தேவாரம்

"கொடுக்கிலாதானைப் பாரியே என்று

கூறினுங் கொடுப்பாரிலை"

(சுந்தரமூர்த்தி நாயனார் 'திருப்புகலூர்' என்னும் திருத்தலத்தில் பாடிய பதிகம்) (Jagannathan, 1958).

## பிங்கலநிகண்டு

"பாரி, எழினி, ஆய், நள்ளி மலையன்

ஓரி, பேகன் இவர் கடைவள்ளல்" (Jagannathan, 1958).

## சூடாமணி நிகண்டு

"பாரி, எழினி, ஆய், நள்ளி

பசுந்தொடை மலையன் பேகன் ஓரியே

கடையில் உற்றோர்" (Jagannathan, 1958).

தொல்காப்பியம் செய்யுளியல் - 125, நச்சினார்க்கினியர் மேற்கோள்

"பாரி, ஓரி" (Jagannathan, 1958).

## திருப்புகழ்

"வண் புகழ் பாரி, காரி

என்றிசைவாது கூறி"

இவ்வாறு சங்க இலக்கியங்கள் அனைத்திலும் கடையேழு வள்ளல்களின் தலைமையிடத்தைப் பெற்று விளங்கியவன் வேள்பாரியே என்பதற்கு இதுவே சான்றாக விளங்கும்.

## ஓரறிவுயிருக்கு முதன்மைக் கொடையளித்த வள்ளல் வேள்பாரி

### முல்லைக்குத் தேர் கொடுத்தல்

"சங்ககால வள்ளல்கள் மற்றெவரையும் விடச்சிறந்த வள்ளல் தன்மைக் கொண்டவன் பாரி என காலந்தோறும் புலவர்கள் பாடிப் போற்றினர்"

"ஒரு தாவரத்தைக் காட்டிலும் பெருந்தச்சர்கள் செய்த தேர் பெரிதில்லை என்பதறிந்த இயற்கையாளன் பாரி, மீளாக்கம் செய்யப்படுவது காலத்தினால் நிகழும் அற்புதம்" (அணிந்துரை: வெய்யில் - வேள்பாரி வரலாற்றுப் புதினம்)

## பழமொழி நானூறு

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்

தொல்லையளித்தாரைக் கேட்டறிதும்" (Pookundran, 2021)

சிறுபாணாற்றுப்படை 87, 89

"நறுவீ யுறைக்கு நாக நெடுவழிச்

சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய" (Premkumar, 2011)

## பாரியின் கருணை உள்ளம்

"மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் கடலைப் பார்க்க வேண்டும்?"

"ஏன்?"

"அது அவ்வளவு விரிந்து பரந்தது

அளவற்றது"

முன்னால் போய்க் கொண்டிருந்த நீலன், சட்டெனத் திரும்பிக் கபிலரை நேர்க்கொண்டு பார்த்துக் கேட்டான்.

"எங்கள் பாரியின் கருணையை விடவா?"

கபிலர் மனதுக்குள் சுருங்கிப் போனார்! (Venkatesan, 2018)

(இவ்வரிகள் வேள்பாரியின் கருணை உள்ளம் பெருங்கடலை விட ஆழமானது என்பதையும், அளவிட முடியாதது என்பதையும், குடிமக்களிடத்தில் அளவற்ற அன்பு கொண்டவன் வேள்பாரி என்பதையும் எடுத்துக் காட்டுவதாக அமைகிறது.)

"இப்போது வள்ளல்களின் தலைநாயகனாகப் பறம்பு நாட்டைச் சேர்ந்த வேள்பாரி இருந்தான். அவனது ஆளுகையும், ஆற்றலும் வாரிக்கொடுக்கும் வள்ளல் தன்மையும் நிலமெங்கும் பரவின." (Venkatesan, 2018) இவ்வாறாக வேள்பாரியானவன் இயற்கையின் மீது பெரும் காதலும், உயிர்களிடத்தில் பேரன்பும் கொண்டவனாய் விளங்கினான்.

## பாரியின் கலையுணர்வும், பாணரும் - கூத்தரும்

"தமிழ் நிலமெங்கும் சுற்றித் திரியும், பாணர்கள் குழுக்கள் ஒருமுறையாவது 'பறம்பு நாடு' சென்று திரும்பினர்" (Venkatesan, 2018) வேள்பாரி பாணருக்கும், கூத்தருக்கும், விறலியருக்கும் வாரி வழங்கும் அட்சய பாத்திரமாய் விளங்கினான்.

தவித்தலைந்த உயிர்களுக்காக தன்னையே தருவான் வேள்பாரி என்னும் குறுநில மன்னன். "எல்லா மன்னர்களிடமும் பரிசில் பெற்ற பாணர்கள், பாரியிடம் தான் கருணையைப் பெற்றனர்" (Venkatesan, 2018) வேள்பாரி, மன்னன் என்ற ஆணவம் இல்லாமல் உண்மையான அன்போடும், கருணை உள்ளத்தோடும் புலவர்களுக்கும், பாணருக்கும், கூத்தருக்கும் பொன்னும், பொருளும் வாரி வழங்கினான்.

"கருணை வற்றப் போவதே இல்லை. அவர்களின் நினைவுகளில் சுரந்து கொண்டே இருந்தது" கடலைப்போல மிகவும் ஆழமானது வேள்பாரியின் கருணை உள்ளம் (Venkatesan, 2018).

"பாணர்கள் தங்கள் நினைவிலிருந்து மட்டுமல்ல நினைவு மறந்தும் பாடும் பாடலாகப் பாரியின் பாடலே இருந்தது" பாணர்கள் தமிழ் நிலமெங்கும் பாரியின் புகழைப் பாடிப் பரப்பினர். இதனைக் கேட்டறிந்த கபிலர் பாரியின் மீது பேரன்பு கொண்டு சிறந்த நண்பராக விளங்கினார் (Venkatesan, 2018).

"புகார் நகரில் நாளங்காடியில் காவல்புரிந்த காவல் வீரன் ஒருவன் அங்கு சுற்றித் திரிந்த பாணர்களிடம் கேட்டான். பாரி பறம்பை ஆள்கிறானா?. (அல்லது) பாணர்களை ஆள்கிறானா?" அந்த அளவிற்கு வேள்பாரி பாணர்களிடமும், கூத்தர்களிடமும் பேரன்பும், கருணையும் கொண்டு

விளங்கினான். "மூவேந்தர்கள் என்னும் பேரரசர்களையும் மீறி நிலை பெற்றிருந்தது பாரியின் புகழ்" (Venkatesan, 2018).

## வேள்பாரியின் வள்ளல் தன்மைக் கண்டு கபிலர் அவனைப் பாடுதல்

"பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்;
பாரி ஒருவனு மல்லன்
மாரியு முண்டீண்டுலகுபுரப் பதுவே" (Manikkavasagar, 2019)

இச்செய்யுளானது பாரியைப் புகழ்ந்து கூறியது அன்று பழித்துக் கூறியது என்றே எல்லோருக்கும் தோன்றும், ஆனால் இப்பாடலின் உண்மைப் பொருளை ஆழமாகச் சிந்தித்தால் பாரிக்கு இணையாக மழையை ஒப்புமைக் காட்டியிருப்பது தெளிவாக விளங்கும்.

## தரம் பார்க்காது தருபவன் வேள்பாரி

"நல்லவும் தீயவும் அல்ல குவிஇணர்ப்
புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை
கடவுள் பேணேம் என்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினும்
கடவன் பாரி கைவண் மையே" (Manikkavasagar, 2019)

எவர் வந்து கேட்பினும் ஈவதே குறியாகக் கொண்ட வேள்பாரியின் வண்மைப் புகழ் கூறும் இப்பாடல் கபிலர் பாடியது.

## 'தன்னையே பரிசாகத் தா' எனினும் தருவான்

"குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
ஆரம் ஆதலின் அரும்புகை அயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினை தவழும்
பறம்பு பாடினர் அதுவே அறம்பூண்டு
பாரியும் பரிசிலர் இரப்பின்
வாரேன் என்னான் அவர்வரை யன்னே" (Manikkavasagar, 2019)

தன்னையே பரிசாகக் கேட்டாலும் தந்துவிடத் தயாராக இருப்பவன், அப்படிக் கேட்டவர்களுக்குத் தன்னையே பரிசாகத் தந்து மகிழ்பவன் 'வேள்பாரியே' ஆவான்.

## பாடி வந்தால் பறம்பும் கிடைக்கும்

"அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே
நீலத் திணைமலர் புரையும் உண்கண்
கிணை கட்கு எளிதால் பாடினள் வரினே" (Manikkavasagar, 2019)

பாடி வந்தால் பறம்பும் கிடைக்கும். யார் வேண்டுமானாலும் ஆடுநர், பாடுநராக வந்துப் பறம்பினை பெறலாம்.

## முடிவுரை

வேள்பாரி குறுநில மன்னனாக இருந்தபோதும் கருணை உள்ளத்திலும், வள்ளல் தன்மையிலும் மூவேந்தர்களினும் உயர்ந்தவனாக சிறந்த விளங்கினான். சிறு முல்லைக் கொடிக்கு பெரும் கருணை காட்டிய இயற்கைப் பற்றாளன். வேள்பாரி தரம் பார்க்காமல் வாரி வழங்கும் தானைத் தலைவன் ஆவான். தமிழுக்காகவும், பிற உயிர்களிடத்தில் கொண்ட அன்புக்காகவும், இயற்கை மீது கொண்ட காதலுக்காகவும் தன்னையே பரிசாகத் தா எனினும் தருவான். தமிழ் நிலம் உள்ளளவும் பாரியின் புகழ் அறிஞர்களாலும், புலவர்களாலும், சான்றோர்களாலும் என்றென்றும் மதித்துப் போற்றப்படும் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

## References

Jagannathan, K.V. (1958) Parivel, Amutha Nilayam, Chennai, India

Manikkavasagar, N (2021) Pathitrupatthu Moolamum Uraiyum, Chennai, India

Pookundran, (2021) Velir Varalaru, Thadagam Pathippagam, Chennai, India

Premkumar, (2011) Sevilakkiya Aivukal, NCBH, Chennai, India

Sirpi Balasubramaniyam, (2021) Thirukkural urai vilakkam, Thamarai Publications, Chennai, India.

Venkatesan, S. (2018) Velpari Varalatru Puthinam, Anantha Vikatan Presuram, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License